| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, THURAIYUR<br>Present : Thiru.R.Suresh Kumar, B.A., LLB(Hons), LLM.,<br>Judicial Magistrate, Musiri<br>Judicial Magistrate(FAC), Thuraiyur | |
|---|---|
| Date: 06.08.2026 | |
| CC.No.145/2021 | |
| சாட்சி : PW.7 | |
| பெயர்: ராஜா | ஜாதி: |
| த/பெ/க/பெ :செங்கமலை | தொழில்: உதவி ஆய்வாளர் |
| கிராமம்:வெங்களம் | சமயம்: |
| தாலுக்கா:வேப்பந்தட்டை | வயது:60 |
| (எதிரி 2 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்) | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>

நான் தற்போது திருச்சி மாவட்டம் நவல்பட்டு காவல் பயிற்சி பள்ளியில் பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் புகார்தாரர் கொடுத்த புகாரை பதிவு செய்த உதவி ஆய்வாளர் குமார் என்பவர் தற்போது உடல் நலம் சரியில்லாமல் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதால் இவ்வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி நீதிமன்ற அனுமதி பெற்று அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம் என்பதால் அவருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 07.02.2020 அன்று உதவி ஆய்வாளர் குமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த துறையூர் அம்மாபட்டி கிராமத்தை சேர்ந்த செந்தில் குமார் மனைவி சாரதி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய கு.எண்.37/2020 சட்டபிரிவுகள் 447, 294(b),323, 427, 506(1) இ.த.ச. கீழ் மற்றும் 4 of TNPHW ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.06 17:00:28 +0530

பின்பு அவர் இந்த வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 08.02.2020 அன்று காலை 08.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரசாந்த், கலையரசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மாதிரி வரைபடம் **அ.சாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து வழக்கு சொத்துகளை கைப்பற்றியுள்ளார். பின்பு சாட்சிகள் சாரதி, செல்லம்மாள், கனகராஜ், செந்தில்குமார், பிரசாந்த், கலையரசன் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார்.

பின்பு சம்பவ இடத்தைபார்வையிட்டதில் இருந்தும் சாட்சிகளை விசாரித்தில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகள் தேடி வந்த நிலையில் எதிரி மனோகரன் என்பவரை 08.02.2020 அன்று காலை 11.00 மணியளவில் அம்மாபட்டி மாரியம்மன் கோவில் மன்பு காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கின் மற்றொரு எதிரி சுகாஷினி என்பவர் மாண்புமிகு.திருச்சி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. அவர் கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் அவர் தனது விசாரணையை முடித்து வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்காக எனது பார்வைக்க வைத்ததை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்த போது அவர்கள் அவரிடம் சொன்ன வாக்கு மூலத்தையே என்னிடமும் சொன்னதால் நான் அவர்களை தனியாக விசாரித்து வாக்கு மூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட சாரதி என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் கொடுத்த துறையூர் அரசு மருத்துவமனை மருத்துவர் வேல்முருகன் என்பவரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றேன். விபத்து பதிவேட்டுடன் கூடிய

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.06 17:00:37 +0530

காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட சாரதி என்பவருக்கு மேல் சிகிச்சை அளித்த திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் துர்கா லட்சுமி என்பவரை விசாரித்து மருத்து அறிக்கை பெற்றேன். மருத்துவ அறிக்கை **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கில் முதல் கட்டவிசாரணை செய்த குமார் என்பவரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து 15.09.2020 தேதி எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கை பதிவு செய்தவர் சம்பவ சமயத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்தாரா என்றால் இல்லை உதவி ஆய்வாளராக தான் இருந்தார். சம்பவ சமயத்தில் நான் மாற்றம் ஆகி துறையூர் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டேனா என்றால் இல்லை அதற்கு பின்பு தான் வந்தேன். நான் எத்தனை மாதங்கள் கழித்து இந்த வழக்கை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டேன் என்றால் கொரோனா காலம் என்பதால் காயச்சான்றிதழ் கிடைக்கவில்லை அதனால் 7 மாதங்கள் ஆனது. நான் திருச்சி மற்றும் துறையூர் மருத்துவரை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் திருச்சி அரசு மருத்துவமனை மற்றும் துறையூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் திருச்சி மருத்துவமனையில் வைத்து 15.09.2020 அன்று விசாரித்தேன். உதவி ஆய்வாளரை அதே தேதியில் விசாரித்தேனா என்றால் ஆமாம். இவ்வழக்கின் சாட்சிகளை நான் மறுவிசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் வழக்கு சொத்துகளை கைப்பற்றியது பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் வழக்கு சொத்து சேதம் அடைந்ததன் மதிப்பு பற்றி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ சாட்சிகளை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு எனக்கு முன்னால் இருந்த உதவி ஆய்வாளர் விசாரணை செய்துள்ளார் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரருக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் உள்ள சொத்து

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.06 17:00:47 +0530

பிரச்சனையை மனதில் வைத்து கொண்டு பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை - இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.06 17:01:02 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.